**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 137/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Leelavathi |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of January, 2026.

**(Accused in Judicial Custody)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.30 மணி

நான் ஊத்துக்கோட்டை தாலுக்கா, தண்ணீர்குளத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். என் சின்னபாட்டி பெயர் பூங்கொடி.

அவர் பாலவாகத்தில் 100 நாள் வேலையாக ஏரியில் வேலை செய்து வந்தார். 06.01.2025 அன்று வேலை செய்து முடித்து விட்டு மாலை 4.00 மணிக்கு வீட்டுக்கு பக்கத்தில் உள்ள சென்னாகாரணி ஏரியில் இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்றார். வரும்வழியில் பின்தொடர்ந்து ராஜா என்பவர் வந்து என் சின்னபாட்டியை அடித்து கை, கால்களை கட்டி முள்புதரில் போட்டு அவரை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். யூரின் போகும் வழியில் கத்தியை வைத்து அறுத்துவிட்டு அந்த கத்தியை போட்டுவிட்டு ஓடிவிட்டார். அங்கு முட்புதரில் கிடந்த என் சின்னபாட்டியை பார்த்த எங்கள் ஊரை சேர்ந்த ஏழுமலை மற்றும் சேகர் ஆகியோர் என் அம்மா அகிலாவிடம் வந்து என் சின்னபாட்டி ரத்த வெள்ளத்தில் கிடப்பதாக சொன்னார்கள். என் அம்மா அங்கு சென்று பார்த்து ரத்த வெள்ளத்தில் கிடந்த என் சின்னபாட்டி பூங்கொடியை தூக்கி தண்ணீர் தெளித்து 108 க்கு ஆம்புலென்ஸ்க்கு போன் செய்து திருவள்ளூர் மருத்துவமனையில் சேர்த்தோம். பின்பு ஊத்துக்கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் இரவு 11.00 மணியளவில் நான் காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏழுமலை மற்றும் சேகர் அவர்களிடம் என் சின்னபாட்டி பூங்கொடி ராஜா என்பவர் தன்னை பின்னால் இருந்து வந்து அடித்து தூக்கி கொண்டு போய் கை, கால்களை கட்டி கெடுத்து விட்டு கீழே முட்புதரில் போட்டு யூரின் போகும் இடத்தில் கத்தியை வைத்து அறுத்துவிட்டு அவர் சென்றதாக கூறியுள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137/2025

| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Poongodi |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of January, 2026.

**(Accused in Judicial Custody)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.45 மணி

நான் தற்போது சென்னாகாரணியில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். நான் பாலவாக்கத்தில் 100 நாள் வேலை

செய்து வருகிறேன். ராஜா என்பவர் என்னை கெடுத்துவிட்டார். என்னை கன்னத்தில் அடித்தார். என் புடவையை அவுத்து வாயை திணித்தார். என்னை கெடுத்துவிட்டார். என்னை கற்பழித்தார். யூரின் போகும் இடத்தில் அறுத்துவிட்டார். போன வருடம் ஜனவரி மாதம் சம்பவம் நடந்தது. தேதி ஞாபகமில்லை. சம்பவம் நடந்த நேரம் மாலை 3.30 மணி இருக்கும். சென்னாகாரணி ஏரியில் வைத்து சம்பவம் நடந்தது. இயற்கை உபாதை கழிப்பதற்காக நான் வெளியே சென்றேன். கால், கை கழுவி வருவதற்காக சென்றபோது கை, கால் கட்டிவிட்டார். என்னை கற்பழித்து விட்டு முட்புதரில் போட்டு ஓடிவிட்டார். யூரின் போகும் இடத்தில் அறுத்துவிட்டார். ஏழுமலை மாடு ஓட்டி வரும்போது நான் கிடந்ததை பார்த்து என் மகள் அகிலாவிடம் கூறியுள்ளார். அதன் பின்பு என்னை மருத்துவமனைக்கு அகிலா அழைத்து சென்றார். இது சம்பந்தமாக திருவள்ளூர் நீதிமன்றத்தில் இதுபோல் கூறினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் என்னுடைய 164 குவிமுச வாக்குமூலத்தில் உள்ள கை நாட்டு என்னுடையது தான். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.137/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Akila |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of January, 2026.

**(Accused in Judicial Custody)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் 12.55 மணி

நான் தற்போது சென்னாகாரணியில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். என் சித்தி பெயர் பூங்கொடி. அவர் என்

வீட்டில் தான் வசித்து வருகிறார். அவர் பாலவாக்கத்தில் 100 நாள் வேலை செய்து வந்தார். 06.01.2025 அன்று பாலவாகத்தில் 100 நாள் வேலை முடித்துவிட்டு சென்னாகாரணி ஏரிக்கு மாலை 3.30 மணியளவில் இயற்கை உபாதை கழிக்க சென்றார். வரும்போது பின்னால் இருந்து ராஜா என்பவர் வாயில் அடித்து புடவையை அவிழ்த்து வாயை கட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அவர் என் சித்தியை கற்பழித்துவிட்டார். யூரின் போகும் இடத்தில் கத்தியால் அறுத்துவிட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். எனக்கு அங்கு மாடு மேய்த்து கொண்டிருந்து ஏழுமலை மற்றும் சேகர் போன் செய்தார்கள். என் சித்தி ரத்த வெள்ளத்தில் இருக்கிறார் வந்து பார் என்று கூறினார்கள். அங்கு நான் உடனே சென்று பார்த்த போது என் சித்தி கை, கால்கள் கட்டப்பட்டு ரத்த வெள்ளத்தில் மயங்கி கிடந்தார். நான் அம்மா கட்டை அவிழ்த்து என் சித்திற்கு தண்ணீர் தெளித்து கேட்டபோது ராஜா என்பவர் தன்னை கட்டி போட்டுவிட்டு கற்பழித்துவிட்டு யூரின் போகும் இடத்தில் கத்தியால் அறுத்துவிட்டு ஓடி போனதாக கூறினார். நான் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலென்ஸில் அழைத்து சென்றேன். இரவு 11.45 மணியளவில் ஊத்துகோட்டை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னை டிஎஸ்பி விசாரித்தார்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.